


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 32 ★ 30-06-2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


## தமிழரசுக் கட்சியின் மாநாட்டு மண்டபத்தை முற்றுகையிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்





## கொளுத்தும் வெயிலிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்

## ஈழ அன்னையர்கள்தான் உலகின் பிக்பாஸ்கள்




தீபச்செல்வன்





## நாயை தடவிக்கொண்டு கல்லைத்தேடும் ரணிலின் உத்தி தொடர்ந்து வெற்றிபெற்று வருகின்றது

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பணிகளை எவ்வாறு அழைப்பது?

கணிதன்



# தமிழரசுக் கட்சியின் மாநாட்டு மண்டபத்தை முற்றுகையிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்






இலங்கை தமிழரசுக்கட்சியின் பேராளர் மாநாடு இன்றைய தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது அந்த மண்டபத்துக்கு முன்னால் காணாமல் ஆக்கப்பட்டவா்களின் உறவினர்கள் தமிழரசுக்கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவா்களின் விடயத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்பதோடு சர்வதேச அரங்கில் இலங்கையை பாதுகாத்து வரும் கூட்டமைப்பின் செயற்பாட்டை கண்டித்தே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்

12 ஆம் பக்கம் பார்க்க



# தமிழரசுக் கட்சி மாநாட்டுத் தீர்மானங்கள் தேர்தலையே இலக்காக கொண்டுள்ளது

## - கடுமையாக விமர்சிக்கின்றது தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்




யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு முன்னோடியாக அதன் இளைஞர் அணி, மகளிர் அணி என்பவற்றில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்கள் எந்தவகையிலும், மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவையாக அமையவில்லை என்பதுடன், அடுத்து வரப்போகும் தேர்தல்களை இலக்குவைத்ததாகவே அமைந்திருக்கின்றது என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடுமையாக விமர்சித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்றுவரும் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள், அடுத்தாக வரப்போகும் தேர்தல்களை இலக்காகக் கொண்டவையாகவே உள்ளன. மாநாட்டில் பேராளர்களாகப் பங்குகொள்பவர்களும் கட்சியின் ஏதோ ஒரு பதவியைப் பிடித்து, குறைந்த பட்சம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காவது ரிக்கெட் எடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் இருப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது எனவும் மையம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்த மையத்தின் அறிக்கையின் விபரம் வருமாறு;





"கடந்த ஐந்து வருடகாலமாக தமது மாநாட்டை நடத்தாமல் காலங்கடத்திய தமிழரசுக் கட்சி, தேர்தல்கள் வரப்போகின்றது என்பதைத் தெரிந்துகொண்ட நிலையில் அவசரமாக மாநாட்டைக் கூட்டியுள்ளது. கட்சியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு குழுவினரின் விருப்பத்துக்கமைய புதிய நிர்வாக சபை தெரிவாகியிருக்கின்றது. சக்திக்குரிய பொதுச் செயலாளர் தெரிவில், சனநாயக முறைப்படி செயற்பட சம்பந்தனும், மாவையும் அனுமதிக்கவில்லை. தமக்குச் சார்பாக செயற்படக்கூடிய

12 ஆம் பக்கம் பார்க்க

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கிளிநாச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்திற்கு முன்பாக நடத்தப்பட்டது.

ஏ9 வீதியில் சுமார் ஒருமணி நேரம்வரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் விடயத்தில் அரசாங்கம் கடந்த 4 வருடங்களாக எந்தவொரு கரிசனையையும் காட்டவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

மேலும், இனியும் இதனை இழுத்தடிக்காமல் விரைவில் உரிய பதிலை வழங்க, அரசாங்கத்துக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.



# இவர்களுக்கு மட்டும்தான் தூக்குத் தண்டனையா?

சர்வதேச நியமங்கள், உலக அரங்கில் கொடுத்த வாக்குறுதிகள் எப்படியிருந்தாலும், தாம் விரும்பியபடி நடப்பதென்பது சிறீலங்கா அரசாங்கத்துக்கு புதியதொன்றல்ல. இப்போது அதிபர் மைத்திரிபால சிறீசேனவும் மரண தண்டனை விடயத்தில் அவ்வாறுதான் நடந்துகொள்கின்றார். நாகரீகமடைந்த அரசுகள் மரண தண்டனையை இல்லாதொழித்துவிட்டன. சர்வாதிகார அரசுகள் மட்டுமே இன்னும் அதனை நடைமுறைப்படுத்துகின்றன. மரண தண்டனையை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையில் ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் சிறீலங்கா கையொப்பமிட்டது. உலக நாடுகள் அனைத்தும் மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்தும் முடிவுக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றன. உள்நாட்டிலும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்புக்கள் இந்த நிலைப்பாட்டில்தான் உள்ளன. இதற்குப் பின்னரும் தன்னுடைய முடிவில் மாற்றமில்லை என உறுதியாக அறிவித்துவிட்டார் மைத்திரி.

போதைவஸ்த்து தொடர்பான குற்றங்கள் சிறீலங்காவில் மிகவும் மோசமாக அதிகரித்திருக்கின்றது என்பது உண்மை. ஆசியாவின் போதைப் பொருள் கடத்தலுக்கான ஒரு மையப்புள்ளியாக சிறீலங்கா வந்துவிட்டது என்பதையும் புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றது. உள்நாட்டிலும் பெருமளவு இளைஞர் யுவதிகள் போதைப் பொருட்களுக்கு அடிடையாக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் அன்றாடச் செய்திகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் கடுமையாக்கப்படுவது மட்டும்போதாது. சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களும் லஞ்சம், ஊழல் போன்றவற்றுக்கு உட்படாது உறுதியாகச் செயற்படுவது அவசியம். காவல்துறையில் காணப்படும் இந்தவகையான குறைபாடுகளைத்தான் தமக்கான வாய்ப்பாக போதைத் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் பின்னர் இரகசியமாக விடுவிக்கப்படுவது சிறீலங்காவில் சகஜம்.

காவல்துறையில் ஓட்டைகளை வைத்துக்கொண்டு, மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது என்பதும், அதன் மூலம் போதைப் பொருட்களை ஒழித்துவிடலாம் என நினைப்பதும் முட்டாள் தனம். மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் நாடுகளில் குற்றச்செயல்கள் ஒழிந்துவிட்டதெனக் கூறமுடியாது. பதிலாக - காவல்துறையினரிடையே லஞ்சம் ஊழல் போன்றனவே அங்கு பல்கிப் பெருகியிருக்கின்றது. தென்னிலங்கை சிங்களவர் மத்தியில் தனக்கு மோசமாகக் குறைந்துவரும் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கும், போதைப் பொருட்களை ஒழித்தவர் என்ற மட்டிலாவது தனது பெயரை நிலைநிறுத்திக்கொள்வதற்காகவுமே இந்த விடயத்தில் மைத்திரி உறுதியாக நிற்கின்றார். முஸ்லிம்களைக் கல்லெறிந்து கொல்லலாம் என அதி உயர் நிலையிலுள்ள பௌத்த துறவி ஒருவரே சொல்லியிருக்கும் நாட்டின் அதிபர் இவ்வாறு செயற்படுவது ஆச்சரியமானதல்ல.

தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி பலவற்றைச் செய்வதற்கு அதிபர் முற்படுகின்றார். அதில் ஒன்றுதான் இந்த மரண தண்டனை. அதே அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் அடாவடித்தனங்களில் ஈடுபட்ட மற்றொரு பௌத்த துறவியான ஞானசார தேரரை பொது மன்னிப்பில் விடுதலை செய்தார். நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக ஆறு வருட சிறைத்தண்டனை பெற்றவர் ஞானசாரர். ஒன்பது மாதங்களிலேயே அவருக்கு பொது மன்னிப்புக் கொடுத்தமைக்கு மைத்திரியால் நியாயமான காரணம் எதனையும் சொல்ல முடியவில்லை. வெளியே வந்த ஞானசாரர், சட்டத்தை தனது கைகளில் எடுத்துக்கொண்டவராகவே செயற்பட்டதை கண்டியிலும் கல்முனையிலும் நாம் காணமுடிந்தது. பொது மன்னிப்பில் வெளிவந்த ஒருவராக அவர் காணப்படவில்லை. ஆக, மைத்திரி சட்டத்தையும், நீதியையும் தனக்கேற்றவாறு பயன்படுத்துகின்றார் என்பதை இச்சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

பலவருடகாலமாக குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றி சிறையில் வாடும் கைதிகளை விடுவிப்பதற்கு தனது அதிகாரத்தை மைத்திரி பயன்படுத்தவில்லை. 14 வருட காலமாக சிறைத் தண்டனை அனுபவத்துவந்த அப்பாவித் தமிழர் ஒருவர் நோயினால் கடந்த வாரம் சிறையில் மரணமடைந்தார். படுகொலை செய்யப்பட்ட முன்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டுக்கு அண்மையில் வசித்த அவர், மரக்கிளை ஒன்றை வெட்டிய குற்றத்துக்காகவே 14 வருடகாலமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் இருந்தவர். இதுபோல மேலும் பல தமிழர்கள் இளைஞர்களாக சிறை சென்று இப்போது நடுத்தர வயதைத் தாண்டியவர்களாக நாட்களையும், கம்பிகளையும் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் விடுதலைக்காக உரிய நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறி, 2015 இல் தமிழ் வாக்குகளையும் பெற்று அதிகாரத்துக்கு வந்த மைத்திரி, அதற்கான தனது அதிகாரத்தை ஒருபோதும் பயன்படுத்தவில்லை.

போரின்போதும் போரின் பின்னரும் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான கொடூர போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்ட படையினர் இப்போதும் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றார்கள். யஸ்மின் சுக்காவின் அமைப்பு கடந்தவாரம் வெளியிட்ட அறிக்கையில் போரின் பின்னர் இடம்பெற்ற மிகவும் மோசமான பாலியல் ரீதியிலான சித்திரவதைகளை விபரித்துள்ளது. அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் நாட்டுக்குள் சுதந்திரமாகத் திரிகின்றார்கள். சிவர் வெளிநாட்டு இராசதந்திரப் பதவிகளைப் பெற்றுச் சென்றிருக்கின்றார்கள். அவர்களைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் புலனாய்த்துறைக்கும், காவல்துறைக்கும் தெரியும். போதைப்பொருள் தொடர்பானவர்களைத் தூக்கில் தொங்கவிடத் துடிக்கும் மைத்திரி, மனித குலமே வெட்கித் தலைகுனிய வேண்டிய குற்றங்களைச் செய்த படையினர் விடயத்தில் கண்டும் காணாமலுமிருப்பது ஏன்? அவர்கள் தமிழர்கள் என்பதாலா?

- ஆசிரியர்

## முல்லைத்தீவில் கொளுத்தும் வெயிலிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இன்றைய தினம் (30) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது .இன்றுடன் 846ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளால் கொளுத்தும் வெயிலிலும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது . முல்லைத்தீவு நீதிமன்றுக்கு அண்மையில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்ட்ட உறவுக ஒன்றுகூடும் இடத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இன்னும் சில நாட்களில் ஐநா மனிதவுரிமைகள் சபையின் இவ்வாண்டுக்கான 2ஆவது அமர்வு நடைபெறவுள்ள நிலையில் தமது போராட்டத்துக்கான நீதியை கோரும் வகையிலும் 846அவது நாட்களாக வீதியில் நீதிகேட்டு போராடும் தம்மை இலங்கை அரசு கைவிட்டுவிட்டதை ஞாபகம் ஊட்டும் வகையிலும் இந்த கவனயீர்ப்பு போராட்டம் ஒழுங்கு செய்யபட்டு நடாத்தபட்டதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "



எங்கே எங்கே எமது உறவுகள் எங்கே , எமது உறவுகளுக்கு என்ன நடந்தது , கையளிக்கபட்ட உறவுகள் எங்கே , பிள்ளைகளை தேடியே இறந்துகொண்டிருக்கும் பெற்றோருக்கு பதில் என்ன?, தமிழர்கள் எங்களிடம் மட்டும் ஏன் இந்த பாராமுகம் ?, பத்து வருடங்கள் காத்திருந்தோம் இன்னும் எத்தனை வருடங்கள் காத்திருக்கவேண்டும் ? சர்வதேசமே எமக்கு நீதியை பெற்று தா ,போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அரசியல் கைதி மரணதிற்கு நீதி வேண்டி - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டம்

அண்மையில் தமிழ் அரசியல் கைதி ஒருவர் சிறையில் உயிரிழந்தமையைக் கண்டித்தும் சிறையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடைபெறும் குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் இதில் தமிழ் தேசிய சிந்தனை மிக்க அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# கரும்புலிகள்

# நாள் 2019

## யூலை 05



**மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.**

- தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்

# சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் சூழ்ச்சிக்குள் தமிழினம் சிக்கக்கூடாது

## தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் த.வசந்தராஜா - சிறப்பு நேர்காணல்

தமிழர் தாயகத்தில் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பை திட்டமிட்டு முன்னெடுத்துக்கொண்டிருக்கும் பேரினவாதம், முஸ்லிம்களை ஒடுக்குவதற்கு தமிழினத்தை பயன்படுத்த விளைகின்றது. இந்த சூழ்ச்சி மாயைக்குள் தமிழினம் சிக்கிவிடக்கூடாது என தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் த.வசந்தராஜா இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் கோரிக்கை விடுத்துள்ளார். அச்செவ்வியின் முதற்பகுதி வருமாறு,



### கேள்வி:- கல்முனை உபபிரிவு தரமுயர்த்தப்படுத்துவதில் இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

பதில்:- 1989ஆம் ஆண்டு கல்முனை வடக்கு உபபிரிவு உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னதாக கல்முனை மாநகரசபை பிரதேசசெயலகம் அனைத்து அதிகாரங்களையும் வளங்களையும் கொண்டு தரமுயர்த்தப்பட்டிருந்தது. இந்த மாநகரசபை நிருவாகத்தின் கீழ் தமிழர்கள், முஸ்லிம்கள் என கிட்டத்தட்ட 70ஆயிரம் பேர் இருந்தனர்.

இக்காலப்பகுதியில் இலங்கை முழுவதிலும் 28 உபபிரிவுகளை உருவாக்கும் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதிலொன்றாக கல்முனை வடக்கு உபபிரிவும் உருவாக்கப்பட்டது. எனினும் இந்த உபபிரிவு முழுமையாக தமிழர்களை மையப்படுத்தியிருந்ததாலோ என்னமோ அதற்கான காணி மற்றும் நிதி கையாளுகைக்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் தமிழர்கள் அன்றிலிருந்து இந்த உபபிரிவினை தரமுயர்த்தவேண்டும் என்று தொடர்ச்சியாக கோர ஆரம்பித்தார்கள். 1993ஆம் ஆண்டு மட்டக்களப்பினை சேர்ந்த கே.டபிள்யு. தேவநாயகம் என்பவர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தார். அவரின் அழுத்தம் காரணமாக உருவாக்கப்பட்ட 28 உபபிரிவுகளில் 27 இற்கு சகல அதிகாரங்களும் அளிக்கப்பட்டபோதும், கல்முனை வடக்கு உபபிரிவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

குறிப்பாக, சகோதர முஸ்லிம் இனத்தலைவர்கள் தமக்கிருந்த அதிகாரத்தினைப் பயன்படுத்தி கல்முனை வடக்கு உபபிரிவு தரமுயர்த்தப்பட்டாலும் அதற்கான நிதி, காணி அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு இடமளித்திருக்கவில்லை.

முஸ்லிம் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக அனைத்து அரசாங்கத்திலும் அங்கம்வகித்து வந்திருந்தமையால் இந்த விடயத்திற்கு உரிய அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதவாறு மூன்று தசாப்தகாலமாக கல்முனை வடக்கு உபபிரிவு விவகாரம் நீடித்து வந்தது.

தமிழ் மக்கள் இந்தப்பிரிவினை தரமுயர்த்துவதற்காக எத்தனையோ முயற்சிகளை எடுத்திருந்தபோதும், எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ்மக்களை வழிநடத்திவருகின்ற தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தில் கூடிய அக்கறை காட்டியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் போதிய அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

### கேள்வி:- கல்முனை வடக்கு விவகாரத்தில் தமிழர்கள் எவ்வாறு பௌத்த தேரர்களின் ஆதரவினை பெறும் தீர்மானத்திற்கு வந்தார்கள்?

பதில்:- உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையொன்று உருவெடுத்திருந்தது. அத்துடன் முஸ்லிம்களை விடவும் சிங்கள மக்களுடன் வாழமுடியும் என்ற மனநிலைத் தோற்றம் சதாரண மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. இது உண்மையான நிலைமை என்று கொள்ள முடியாது விட்டாலும் சதாரண மக்கள் அவ்வாறான சிந்தனைக்குள் தள்ளப்பட்டிருகின்றார்கள்.

அத்துடன் தலதா மாளிகைக்கு முன்னால் அத்துரலிய தேரரின் உண்ணாவிரதம் முஸ்லிம் பிரதிநிதிகளை பதவிகளிலிருந்து இறக்கி வெற்றிகண்டிருந்தது. இத்தகைய பிரதிபலிப்புக்கள் எல்லாம் ஒன்றிணைந்ததன் காரணத்தால் தான் தமிழ் மக்கள் கல்முனை வடக்கு விடயத்தில், தேரர்களை நாடினார்கள்.




கல்முனை விகாரதிபதி ரன்முத்துகலவுடன் தமிழ் தரப்பினரும் ஏனைய மதத்தலைவர்களும் இணைந்து உண்ணாவிரதப்போராட்டத்தினை மேற்கொண்டார்கள். இதற்கு மட்டக்களப்பு உட்பட தமிழர் தாயகத்தின் அனைத்து பகுதிகளும் பூரணமான ஆதரவினையும் அளித்திருந்தன. தற்போது ஒரு மாத காலத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தினை முறையான அணுகுமுறை ஊடாக கையாண்டிருந்தால் எப்போதோ இப்பிரச்சினைக்கு தீர்வினைக் கண்டிருக்க முடியும். ஆனால் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குறிப்பாக, 2015 இற்கு பின்னரான காலத்தில் தமிழ்த் தரப்புக்கள் அரசாங்கத்துடன் பேசி இந்த சிறிய விடயத்திற்கு கூட சரியான தீர்வு அளிக்கவில்லையே என்ற மனவேதனை கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாக உள்ளது.

அத்துடன் இத்தகைய மனவிரக்தியும், நம்பிக்கையீனமும் தான் பௌத்த தேரர்களை பயன்படுத்தியாவது தமது கோரிக்கையை சாதித்துக்கொள்வோம் என்ற மனநிலையை உருவாக்கியிருக்கின்றது.

### கேள்வி:- கல்முனை தமிழ் பிரிவு விடயத்தில் தீர்வு பெறுவதற்காக தமிழ் மக்கள் பௌத்த தேரர்களை நோக்கிச் சென்றிருக்கின்றமையானது, தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வரும், பௌத்த சிங்கள மயமாக்கல் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு அல்லது அதற்கு எதிராக போராடுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிடாதா?

பதில்:- இந்த விடயத்தில் யதார்த்தமான கருத்துக்கள் இல்லாமலில்லை. கல்முனை விடயத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக பௌத்த தேரர்கள் செயற்படுகின்றார்கள். அப்படியிருக்கையில், தமிழ் மக்கள் சொல்லொண்ணாத்துன்பங்களையும், வலிகளையும் அனுபவித்து பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த தருணத்தில் அன்பு, இரக்கம், அமைதி போன்ற கோட்பாடுகளைக் கொண்டிருக்கும் பௌத்த தேரர்கள் இந்த நாட்டின் பிறிதொரு இனமும் சமத்துவமாக இருக்க வேண்டும் என்று கருதி நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும்.

ஆனால் பௌத்த தேரர்கள் அவ்வாறு செயற்படவில்லை. தற்போதைய சூழலில் ஒட்டுமொத்த சிறுபான்மை இனத்தின் வளர்ச்சியையும் மட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் சிங்கள, பௌத்த பேரினவாதம் செயற்படுகின்றது. தமிழின விடுதலைக்காக நடைபெற்றிருந்த போராட்டத்தினை அடக்கி ஒடுக்கி விட்டதாக மார்பு தட்டிக்கொண்டிருக்கும் சிங்கள , பௌத்த பேரினவாதிகள் தமிழர்களிடத்தில் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் எதிர்ப்புகளும் எதிர்காலத்தில் ஏற்பாடப்பேவதில்லை என்று உறுதியாக நம்புகின்றார்கள்.

இந்நிலையில் ததற்போது சகோதர முஸ்லிம் இனம் மீது இலக்கு வைத்துள்ளார்கள். முஸ்லிம் இனத்தின் பொருளாதார ரீதியான வளர்ச்சி எதிர்காலத்தில் தமக்கு அச்சுறுத்தலாகிவிடும் என்று கருதுகின்றார்கள். இதனால் அவர்களையும் மட்டுப்படுத்த விளைகின்றார்கள். இந்தப் பின்னணியில் தான் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பினை சாதகமாக பயன்படுத்தி முஸ்லிம்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி முஸ்லிம்களை

11 ஆம் பக்கம் பார்க்க

# நாயை தடவிக்கொண்டு கல்லைத்தேடும் ரணிலின் உத்தி

## தொடர்ந்து வெற்றிபெற்று வருகின்றது

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

படை பலமும், அரசியல் இராசதந்திரமும் உள்ள இனமும், நாடும் தப்பிப்பிழைக்கும் என்பதற்கு அண்மைய உதாரணமாக சிரியா விளங்கியது, அதாவது மேற்குலகத்தின் வன்முறைகளை முறியடிப்பதற்கு ரஸ்யா இராணுவத்தின் துணையை நாடியதால் அமெரிக்காவின் “பேய்களின் கூட்டு” என்ற இனஅழிப்பு தத்துவத்தில் இருந்து சிரியா தப்பிக்கொண்டது.

அதனையே தற்போது ஈரானும் பின்பற்றுகின்றது. தனது பலத்தை தக்கவைப்பதிலும், மேற்குலகத்திற்கு எதிரான கூட்டணியின் கொள்கைகளை உள்வாங்குவதன் மூலமும் தனது நாட்டையும், மக்களையும் காப்பாற்ற முற்பட்டுள்ளது ஈரான்.

சிரியாவின் வழியை பின்பற்றி, ரஸ்யாவுடன் நெருக்கமான பிணைப்புக்களை ஏற்படுத்தியுள்ள ஈரான் தற்போது தன்னிடம் ரஸ்யாவின் அதிநவீன ஆயுதங்கள் உண்டு என்ற பீதியையும் அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அதற்காகவே கடந்த 20 ஆம் நாள் அமெரிக்காவின் அதி நவீன உளவு விமானத்தை (Global Hawk) ஈரான் சுட்டுவீழ்த்தியிருந்தது. இந்த தாக்குதல் அமெரிக்காவுக்கு மிகவும் அதிர்ச்சிகரமானது, ஏனெனில் 65,000 அடிகள் உயரத்தில் பறக்கும் விமானத்தை புறஊதாக் கதிர்



வெப்பத்தை நாடிச்செல்லும் சாதாரண ஏவுகணை மூலம் வீழ்த்த முடியாது. எனவே தான் அமெரிக்க கடற்படை கப்பல்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள நீரிணைகளைக் கடக்கும் போது இந்த உளவு விமானங்கள் அவற்றிற்கான பாதுகாப்பு கண்காணிப்புக்களை மேற்கொள்வதுண்டு.

சிரியாவில் மட்டும் கடந்த ஆண்டு 15 இற்கு மேற்பட்ட உளவு பணிகளை இந்த விமானம் மேற்கொண்டிருந்தது. அதனை வீழ்த்த முடியாது என அமெரிக்கா நம்பியிருக்கலாம், ஆனால் அமெரிக்காவின் பிந்திய தயாரிப்பான எபஃ-35 ரக உருமறைப்பு தாக்குதல் விமானத்தை (F-35A Lightning II Joint Strike Fighter) விட (89 மில்லியன் டொலர்) அதிக பெறுமதியான இந்த உளவு விமானத்தை (123 மில்லியன் டொலர்) தன்னிடம் உள்ள எஸ்-300 என்ற ரஸ்யாவின் ஏவுகணை மூலம் ஈரான் வீழ்த்தியுள்ளது.

100,000 அடிகள் உயர தூரவீச்சுக்கொண்ட இந்த ஏவுகணை ராடர் மூலம் வழிநடத்தப்படுவதாகும். ஈரானின் இந்த துணிச்சலான நடவடிக்கை அமெரிக்காவின் போர்க் கனவை பின்தள்ளியுள்ளது. அதன் மூலம் ஈரான் மக்கள் பேரழிவில் இருந்து தற்போது தப்பிக்கொண்டனர்.

அதாவது ஒரு இனத்தின் அரசியல் தலைவர்கள் என்பவர்கள் தமது இனத்தை காப்பாற்ற வேண்டிய வழிமுறைகளைத் தேடவேண்டும். சிறீலங்காவின் தென்னிலங்கையைப் பொறுத்தவரையிலும் அதனை நாம் காணமுடியும்.

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் ஆட்சியில் இருந்த ஒவ்வொரு அரச தலைவர்களுக்கும் ஒவ்வொரு அரசியல் சாணக்கியம் உண்டு, ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் அணுகுமுறை ஆர் பிரேமதாசாவின் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டது. இராசதந்திரம் என்ற அணுகுமுறையில் தமிழ் மக்களின் போரிடும் வலுவையும், தமிழ் மக்கள் மீதான ஒரு இனஅழிப்பையும் மேற்கொள்வதில் பிரேமதாசாவைவிட ஜே.ஆர் மிகவும் கைதேர்ந்தவராக இருந்தார்.

அதேபோலவே தற்போது ரணிலின் அணுகுமுறையும் உள்ளது, மேற்குலகத்தின் ஆதரவைப் பெற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவியை கைப்பற்றிய அவர் தனது பதவி பல தடவைகள் அந்தரத்தில் தொங்கிய போதும் தமிழ் மக்களுக்கு எந்த சலுகைகளையும் வழங்க முன்வரவில்லை, மாறாக தமிழ்த் தலைமைகளின் ஆதரவைப் பெற்று அவர்களை ஏமாற்றுவதில் தொடர்ந்தும் வெற்றிபெற்றே வருகின்றார்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் தமது உரிமைகளுக்காக போரிட்டு உயிர்களைத்துறந்து, அதன் மூலம் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை ஐக்கிய நாடுகள் சபைவரை கொண்டுவந்து, அனைத்துலக மட்டத்தில் ஒரு பேசும் பொருளாக்கி தமிழ் மக்களுக்கு ஒரு பேரம்பேசும் அரசியல் பலத்தை ஏற்படுத்தியிருந்தனர் விடுதலைப்புலிகள்.

ஆனால் அதனைகூட தமது பலமாகக் கருதி இனஅழிப்புக்கு உட்பட்ட ஒரு இனத்திற்கு தேவையான அடிப்படை உரிமைகளைக் கூட பெறமுடியாத இயலாமை அரசியலை மேற்கொண்டு வருகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதனைத் தான் நாம் தற்போது கல்முனைவடக்கு பிரதேச சபையினை தரமுயர்த்த மேற்கொண்ட போராட்டத்திலும் கண்டோம்.

1989 ஆம் ஆண்டில் இருந்து இந்த பிரச்சனை உள்ளதாக சிறீலங்கா அமைச்சரே ஒப்புக்கொள்கின்றார், அதனை தரமுயர்த்த வேண்டாம் என்ற முஸ்லீம் அமைச்சரின் கோரிக்கைக்கு ரணில் உடன்படுகின்றார், ஆனால் ரணிலுக்கு மனம்நோகக் கூடாது என்பதற்காக தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை கூட கைவிட்டுவிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், அவரின் போக்கை தட்டிக்கேட்க முடியவில்லை ஏனைய உறுப்பினர்களால். இது தான் தமிழ் தலைமைகளின் சாணக்கியம்.



போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையிலும், போரில் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை அரசியல் தேவைகளை நிறைவேற்றவோ அல்லது வேறு வடிவங்களில் சிறீலங்கா அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் இனஅழிப்புக்களில் இருந்து இனத்தைக் காப்பாற்றவோ தமிழ் அரசியல்வாதிகளால் முடியவில்லை.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவில் அங்கம் வகித்த ஒருவருடன் அண்மையில் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. பத்து வருடங்களாகியும், எமது மக்களின் துயரங்கள் விலகவில்லை, அரசியல் கைதிகளைக் கூட விடுவிக்க முடியவில்லை என்று தெரிவித்த போது, அவர் என்னிடம் கூறியது ஒன்று தான் அதாவது உங்களின் அரசியல்வாதிகளின் தவறுகள் இவை, அது மட்டுமல்லாது, அவர்களுக்கு வாக்களித்த மக்கள் கூட தமது அரசியல்வாதிகளிடம் கேள்விகள் கேட்பதில்லை என்றும் கூறியவர்.

ஒரு ஐந்து கோரிக்கைளை எழுதி அதனை அரசியல்வாதிகள் நிறைவேற்றினார்களா? நிறைவேற்றவில்லை என்றால் அதற்கான காரணம், அதற்கான தடைகள் குறித்து மக்கள் தமது அரசியல்வாதிகளிடம் கேள்விகளை கேட்கவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

உண்மைதான், பிரித்தானியாவிலும், கனடாவிலும், அரசியல்வாதிகளிடம் மக்கள் கேள்வி கேட்பதனால்தானோ என்னவோ அந்த நாடுகளில் ஓரளவேனும் சனநாயகம் நடைமுறையில் உள்ளதுடன், அந்த மக்களும் தமது உரிமைகளுடன் வாழ்கின்றனர்.

போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்டது இன்றும் எமது மக்கள் தமது உரிமைகளுக்காக வடக்குக்கு பயணம் செய்யும் சிங்கள அரசியல்வாதிகளின் கால்களில் வீழ்ந்து கதறுகின்றனர்.

எமது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும், தமிழ் இனத்தின் இருப்பை தக்கவைக்கவேண்டும் என இந்த பத்து ஆண்டு நிறைவிற்கு பின்னர் பல இனப்பற்றுள்ள ஆர்வலர்களும், இளம் தலைமுறையினரும் புறப்பட்டுள்ளனர். தாயகத்தில் உள்ள அரசியல்வாதிகளால் மட்டுமல்லாது, செயற்திறனற்ற புலம்பெயர் தமிழ் அமைப்புக்களாலும் தாம் ஏமாற்றப்படுவதாக அவர்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

எனவே அவர்கள் தமது போராட்டத்தை யாருக்கு எதிராக எங்கிருந்து முதலில் ஆரம்பிக்கபோகின்றனர் என்பதை தெளிவாக தீர்மானிக்க வேண்டிய தருணமிது.

தீபச்செல்வன்

# ஈழ அன்னையர்கள்தான் உலகின் பிக்பாஸ்கள்






இந்தியா மற்றும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே தொலைக்காட்சிகள்தான் மக்களை கட்டிப் போடுகின்றன என்று தமிழக இதழியல் துறை பேராசிரியர் கோ. ரவீந்திரன் கூறுகிறார். ஒரு செய்தியை ஒரு தேவைக்காக உருவாக்கும் இந்த தொலைக்காட்சிகள், இன்னொரு செய்தியை உருவாக்கி, முதல் செய்தியை மறக்கடிக்கச் செய்கின்றன. எத்தனையோ பிரச்சினைகள் வெளித் தெரியாமல் அடிபட்டுப் போகின்றன. இரகசியங்களாக இருளில் மறைந்து போகின்றன. இத்தகைய ஊடக ஆதிக்கத்திற்கு மத்தியில்தான் அங்கு கடுமையான பாலியல் வன்புணர்வுகளும் நடக்கின்றன.

ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் நெடுங்காலத் தொடர்புண்டு. ஈழத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் நிலவரங்களை செய்தியாக வெளியிடுவதில் ஈழப் பத்திரிகைகள் மிக முக்கிய இடத்தை வழங்குகின்றன. தமிழக செய்திகள் என்றும் இந்திய செய்திகள் என்றும் தனியான பக்கங்களே ஒதுக்கப்படுகின்றன. இந்தியாவிலும் தமிழகத்திலும் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் ஈழ ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக அமைகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் ஒளிபரப்பிய தமிழீழ தேசியத் தொலைக்காட்சி மற்றும் புலிகளின் குரல் வானொலி ஆகியற்றிலும் இந்திய, தமிழக செய்திகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இப்போதும் இலங்கையின் தமிழ் தேசிய நாளிதழ்களில் வாரம் தோறும் இந்திய நிலவரங்களின் மதிப்பீடுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அத்துடன் இலங்கையின் இன்றைய தொலைக்காட்சிகள் கூட அவ்வாறே செயற்படுகின்றன. ஆசியாவில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வானொலிச் சேவை இலங்கை வானொலி. ஊடகத்தில் ஈழம் எப்போதும் முன் உதாரணமான நாடுதான். ஆனால் இன்றைக்கு ஊடகம், சினிமா குறித்த தொழில் நகரமான சென்னையைக் கொண்டுள்ள தமிழகத்தின் ஊடக நிலைமைகள் பெரும் கவலை அளிப்பதாகவே உள்ளது. அதாவது மக்கள் ஊடகங்கள் என்பதிலிருந்து அவை விலகுகின்றன.

அண்மைய காலத்தில் பிக்பாஸ் என்ற மெய்மை நிகழ்ச்சி ஒன்று பிரபல இந்திய தொலைக்காட்சி ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் ஈழம் வரை பரவியிருக்கிறது. கடந்த காலத்தில் இந்த நிகழ்ச்சி முழு தமிழ் நாட்டையும் முழு உலக தமிழர்களையும் ஆக்கிரமித்திருந்தது. இம்முறை குறித்த தொலைக்காட்சி ஈழத் தமிழர்களையும் புலம்பெயர் தமிழர்களையும் தெளிவாக இலக்கு வைத்திருக்கிறது. கிளிநொச்சியில் பிறந்து திருகோணமலையில் படித்து, கொழும்பில் வளர்ந்த என்ற அடைமொழிகளுடன் சில போட்டியாளர்கள் அதில் கலந்து கொண்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கும் திருகோணமலைக்கும் ஒரு அடையாளமும் வரலாறும் இருக்கிறது. இப்போது இந்த நிகழ்ச்சிக்காக போட்டியாளர்களுக்கு இந்த மண்ணின் போரை வைத்து சமூக வலைத்தளங்களில் கவனங்களை கோரும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. உண்மையில் தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரையில் இங்கு எத்தனையோ பிரச்சினைகள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் விடும் கண்ணீர் ஒருபுறம். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடும் குடும்பங்கள் மறுபுறம். நிலங்கள் ஆக்கிரமிப்பு, இராணுவ மயம். அரசியல் தீர்வின்மை என்று ஈழம் கொந்தளிப்போடு போராடிக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தில் உள்ள சில அச்சு ஊடகங்கள் ஈழத்தின் இந்த நிலவரங்களைப் பற்றி பேசுகின்றன. சில தொலைக்காட்சிகள் அவ்வப்போது இந்த விடயங்கள் குறித்து சில விவாதங்களை நடத்தியுள்ளன. ஆனால், ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டு, பல ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் இந்த தேசத்திற்கான மதிப்பு அவ்வளவுதானா? ஈழத்தில் நடந்தவைகள், இனி உலகத்தில் நடக்கக் கூடாதவைகள். எனவே இவற்றை உலக அளவில் எடுத்துச் செல்ல தமிழக ஊடகங்கள் பங்களிக்க வேண்டுமல்லவா? குறிப்பாக தொலைக்காட்சிகள் இந்தப் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமல்லவா? ஈழத்தில் லட்சம் பேர் கொல்லப்பட்டபோதும், தமிழக தொலைக்காட்சிகள் மானாட மயிலாட நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருந்தன. அன்றைக்கு இனப்படுகொலை குறித்த செய்தியை தமிழக மக்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்க தவறியது. இப்போதும், ஈழ மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகளை 24 மணி நேர ஒளிபரப்பில் ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்க முடியாதா? ஈழம் என்ற ஒரு நாடு இருக்கிறது. அங்கு எப்படியான பிரச்சினைகள் இருக்கின்றன? மக்கள் எப்படி வாழ்கிறார்கள்? எப்படி போராடுகிறார்கள்? என்ற நிலவரத்தை பேசினால், ஈழம் குறித்த தமிழக மக்களின் புரிதல் அதிகரிக்குமல்லவா?

தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொண்ணூறுகளின் இறுதிவரை முழுக்க முழுக்க சினிமாதான் ஆட்சி செய்து வந்தது. இப்போது தொலைக்காட்சிகள் மக்களை கட்டி ஆழ்கின்றன. ஊடகத்துறை சார்ந்த வல்லுநர்கள் சுமார் அறுபது வருடங்களுக்கு முன் எச்சரித்த விடயங்கள் இன்றைக்கு தமிழகத்தில் நடந்தேறி வருவதுதான் இங்கே முக்கியமானது.

அமெரிக்கப் பேராசிரியரான வில்பர் ஸ்ராம், 1960களில் தன்னுடைய ஆய்வு ஒன்றில் தொலைக்காட்சி ஊடகத்தின் தாக்கம் குறித்து எச்சரித்திருந்தார். தொலைக்காட்சிகள் குழந்தைகளையும் இளைஞர்களையும் மிகவும் பாதிப்பதாகவும் அது அவர்களை முழுமையாக சீர்குலைக்கும் என்றும் அவர் எச்சரித்தார். இவை மனித தொடர்பாடலை பாதிக்கும் என்றும் ஊடகங்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகுகின்ற கல்வி பள்ளிகளில் சிறு வயதிலிருந்தே தேவை என்றும் வில்பர் ஸ்ராம் போன்றவர்கள் அக்காலத்தில் பரிந்துரைத்தார்கள்.



சினிமா, ஊடகம், ஊடக கல்வி என பல்வேறு கற்கைகளும் உரையாடல்களும் நடக்கக்கூடிய தமிழகத்தில் இன்றைக்கு தொலைக்காட்சிகளின் ஆதிக்கம் தலை தூக்கியுள்ளது. ஆதிக்கம் செய்கின்ற இந்த தொலைக்காட்சிகள்தான் தமிழக மக்களின் எளிய பிரச்சினைகளிலிருந்து கவனத்தை திசை திருப்புகின்றன. தமிழகத்தின்

இந்தப் பெரிய தமிழகம் இருந்த போதுதான் ஈழ இனப்படுகொலை நடத்தப்பட்டது. இன்றைக்கும் தமிழக மக்கள் அந்த குற்ற உணர்வுடன்தான் எங்களுடன் பேசுகின்றனர். பிக்பாஸ் நிகழ்ச்சியை நடாத்துகின்ற குறித்த தொலைக்காட்சி, பாடல் போட்டி ஒன்றின்போது, விடை கொடு எங்கள் நாடே பாடலை பாட செய்கிறது. ஈழம் குறித்த கழிவிரக்கத்தை தேடி, தொலைக்காட்சி ஊடகப் போட்டியில் வெல்வதும், வர்த்தக ரீதியில் முன்னேறுவதும்தான் அதன் நோக்கம். இது குறித்து ஈழத் தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழக தமிழ்

11 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பணிகளை எவ்வாறு அழைப்பது?

கணிதன்

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அதீத நம்பிக்கை வைத்து தமது நாளாந்த பிரச்சினை முதல் அரசியல்தீர்வுவரை அனைத்தையும் அடைய எதிர்பார்த்திருந்தனர். யார் கண் பட்டதோ கூட்டமைப்பின் ஒற்றுமை அன்றிலிருந்தே சிதைய ஆரம்பித்து விட்டது.

ஒற்றுமை சிதைவடைவதை அறிந்த பின்னரும் எந்தவொரு தனிநபரோ அல்லது கட்சியோ தமக்கான விடிவைக் கொண்டுவராது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருந்தனர். அதன் விளைவாகவே கூட்டமைப்பைப் பயன்படுத்தி தமிழரசுக் கட்சி தன்னை வளர்த்துக்கொண்டபோதிலும், இதனை நன்குணர்ந்த நிலையிலும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே தமது முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தனர். அதனால்தான் 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் கூட்டமைப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றிருந்தது.

ஆயுதப்போராட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்த நிலையில், அனைவரும் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்திய வேளையில், தற்பொழுது யுத்தநிறுத்தம் மேற்கொண்டால் அது புலிகளுக்கு ஒட்சிசன் வழங்கியதுபோல் ஆகிவிடும் என்று கூறிய புளொட்டையும் கூட அது கூட்டமைப்பில் இணைந்துகொண்ட ஒரே காரணத்திற்காக தமிழ் மக்கள் தற்காலிகமாக அதன் தவறை மறந்து அதற்கும் ஆதரவு வழங்கியிருந்தனர். புளொட் கூட்டமைப்பில் இணைந்த உடன் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் பரப்புரையின்போது அதன் தலைவர் திரு.சித்தார்த்தன், “அரசியல் கட்சிகள் இணைந்துவிட்டோம். இனி மக்கள் தாங்கள்



ஐக்கியமாக இருக்கிறோம் என்பதையும் எங்களது ஐக்கியத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்பதையும் அனைவருக்கும் தெரிவிப்பது, தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோகமாக வெற்றியடையச் செய்வதிலேயே தங்கியுள்ளது” என்றும் கேட்டுக்கொண்டார். மக்களும் தாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்குத் தயாராக இருப்பதை தேர்தல்களின் மூலம் தெளிவாகவே வெளிப்படுத்தியிருந்தனர்.



ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட உடன் நடைபெற்ற 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இலங்கை தமிழரசுக் கட்சி தனது மக்கள் விரோதக் கொள்கையை ஆரம்பித்துவிட்டது. இருப்பினும் உட்கட்சி சனநாயகப் போராட்டத்தினூடாக தமிழரசுக் கட்சியை வழிக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்று அப்போது அங்கத்துவக் கட்சிகள் நம்பின. பின்னர் சில அங்கத்துவக் கட்சிகள் என்ன காரணத்திற்காகவோ தமிழரசுக் கட்சி கிழித்த கோட்டைத் தாண்ட மறுக்கின்றன. இதுவே தமிழரசுக் கட்சி இன்று தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து, மக்கள் வழங்கிய ஆணைகளுக்கு மாறாக, எதேச்சாதிகாரமாகச் செயற்படுவதற்கும் அங்கத்துவக் கட்சிகள் கையறு நிலைக்குச் சென்றிருப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததன் காரணமாக 2012ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கையின்மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டது. இதன்போது 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னிக்கு நேரடியாகச் சென்று மீள்குடியேறிய மக்களைச் சந்தித்து இறுதி யுத்தத்தின்போது அவர்களது அனுபவங்களையும் இழப்புக்களையும் குறித்து தாம் சேகரித்திருந்த சாட்சியங்களை ஜெனீவா மனித உரிமைகள் ஆணையகத்தில் கையளிக்க முடிவு செய்திருந்தனர். ஆனால் பின்னர் அமெரிக்கா அதனை விரும்பவில்லை என்று காரணம்கூறி தமிழ் மக்கள் வழங்கிய ஏகோபித்த ஆதரவின் காரணமாக தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த சுமந்திரன் தெரிவித்தார். இதிலிருந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் விரோதச் செயற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

2012ஆம் ஆண்டு பிரேரணையை அன்றைய மகிந்தராஜபக்ச அரசாங்கம் நிராகரித்திருந்தது. அதன் பின்னர் அமெரிக்கா மீண்டும் 2013ஆம் ஆண்டு ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. இந்தக் கூட்டத்தொடரில் அரசாங்கத்துடன் எதிர்க்கட்சியிலிருந்த மங்கள சமரவீரவும் பங்குபற்றியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. இதிலும் இலங்கை அரசாங்கம் ஏராளமான விடயங்களை ஏற்க மறுத்திருந்தது. இந்த நிலையில்தான் சுமந்திரன், மங்களசமரவீர, ரணில், சந்திரிகா அம்மையார் போன்றவர்கள் அவ்வப்போது சிங்கப்பூர் சென்றுவந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் மெத்தனப்போக்கு சர்வதேச சமூகத்தினருக்கு எரிச்சலூட்டுவதாக அமைந்தது. இதன் பயனாகவே அவர்களின் முயற்சியால் 2015ஆம் ஆண்டு சனாதிபதியாக மைத்திரிபால சிறீசேனவும், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்பொழுதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து தமிழ் மக்களின் நலன்களைப் புறந்தள்ளிச் செயற்படத் தொடங்கிவிட்டது.

சனாதிபதித் தேர்தல் நேரத்தில் எந்த மைத்திரிக்காக வக்காளத்து வாங்கி தமிழரசுக் கட்சி செயற்பட்டதோ அதே கட்சி பின்னர் அவருக்கு எதிராக மட்டுமே செயற்பட ஆரம்பித்தது. 2015ஆம் ஆண்டு மார்ச்மாத ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் நடக்கவிருந்த விவாதத்தை திருவாளர் சுமந்திரனும் மங்கள சமரவீரவும் அவசர அவசரமாக அமெரிக்காவிற்கும் ஜெனீவாவிற்கும் பறந்தோடி அதனை பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நடத்துவதற்கு வேண்டுகோள் விடுத்தனர். இந்த நேரத்தில் இலங்கைக்கு நேரடியாக விஜயம் செய்து கள ஆய்வுகளை மேற்கொண்டு மக்களிடமிருந்து நேரடியாக வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொண்டு தமது அறிக்கையை சமர்ப்பிக்கவிருந்த அன்றைய மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் திருமதி நவீப்பிள்ளை தனது பதவிக்காலம் முடிவடைந்து விடைபெறுகிறார். அவர் சமர்ப்பித்திருந்த இடைக்கால அறிக்கையிலேயே இலங்கை குறித்து காட்டமான கருத்துக்களை முன்வைத்திருந்தார். அவர் பதவியில் இருந்தபோது இந்த விவாதம் நடைபெற்றிருந்தால் இலங்கை பாரிய

9 ஆம் பக்கம் பார்க்க

8 ஆம் பக்க தொடர்ச்சி → **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்**

அழுத்தத்திற்கு முகங்கொடுத்திருக்கும். இதிலிருந்து இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றியவர்கள் தமிழரசுக் கட்சியின் வெளியுறவுச் செயலாளரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் அன்றைய வெளிவிவகார அமைச்சருமே.

இதனைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு அன்றைய மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் திரு.சையத் றாட் அல் ஹசைன் நவீப்பிள்ளையின் அறிக்கையை மையப்படுத்தி தனது காட்டமான விமர்சனங்களையும் முன்மொழிவுகளையும் முன்வைத்திருந்தார். இலங்கை இனியும் தனது நாட்டில் நடைபெற்ற விடயங்கள் குறித்து விசாரணை நடத்தும் என்ற நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல முன்மொழிவுகளைச் செய்திருந்தார். இதன்போது மீண்டும் திருவாளர் சுமந்திரன் அமெரிக்காவிற்கும் ஜெனீவாவிற்கும் பறந்து அதனை நீர்த்துப் போகச் செய்து இலங்கையில் நடைபெற்ற யுத்தக்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஒரு கலப்பு விசாரணைப் பொறிமுறையினை மேற்கொள்வதற்கான திருத்தத்துடன் தீர்மானம் நிறைவேற்றி இலங்கை அரசாங்கத்தையும் அதற்கு இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொள்ளச் செய்திருந்தார். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு ஆண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. இதுவே 30/1 தீர்மானம் என்று அழைக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் அன்றைய தலைவரான திரு.சம்பந்தரினால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சராக முடிசூட்டி வைக்கப்பட்ட திருவாளர் விக்கினேஸ்வரன் அவர்கள் இதிலிருந்துதான் தனது தலைவர்களுடன் முரண்பட ஆரம்பித்தார். இதனாலேயே அவர் அன்றைய நாடாளுமன்றத் தேர்தலின்போது இரட்டைப்பொருள்பட தமிழர்கள் அனைவரும் வீட்டைவிட்டு வெளியில் வந்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இலங்கையின் இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 30/1 நடைமுறைப்படுத்தாத நிலையில், அதில் எத்தகைய மாற்றமுமின்றி 34/1 தீர்மானத்தின் மூலம் மேலும் இரண்டாண்டு கால அவகாசம் வழங்கப்பட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டிருந்த போதிலும், தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கான போராட்டம் சர்வதேசமயப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கம் யுத்தம் என்ற போர்வையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றுள்ளது. அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. மனிதகுலமே வெட்கித் தலைகுனியும் செயல்கள் இடம்பெற்றுள்ளன என்று சர்வதேச நாடுகள் தெரிவிக்கும் அளவிற்கும் அதனோடு மட்டுமல்லாமல் இத்தகைய செயற்பாடுகள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் கருத்துரைக்கும் அளவிற்கு ஆயுதப் போராட்டம் பல கதவுகளைத் திறந்திருந்தது.

அரசியல் தீர்வு இதோ வரப்போகிறது. பொங்கலுக்குள் வந்துவிடும் தீபாவளிக்குள் வந்துவிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திருவாளர் சம்பந்தன் திருவாய் மலர்ந்திருந்தார். அதற்கான எத்தகைய முன்முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் ஐ.நாவில் இலங்கைக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுத்து சர்வதேசத்தின் அனுதாபத்தைப் பெற்றிருந்த தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அரசாங்கத்துடன் இணைந்து நீர்த்துப் போகச் செய்வதில் முனைப்புடன் செயற்பட்ட பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் அதன் சிரேஸ்ட




தலைவர் திருவாளர் சம்பந்தரையும் அவரது கைப்பாவையும் ரணிலின் செல்லப்பிள்ளையுமான சுமந்திரனையுமே சாரும்.

அரசியல் தீர்வு ஒருபுறம் இருக்கட்டும். இவர்களது இவ்வளவு விட்டுக்கொடுப்புகளும் முண்டுகொடுப்பும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ததா? காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுத்ததா? இராணுவத்தினரும் அரசாங்கத்தின் திணைக்களத்தினரும் அடாத்தாகக் கபளீகரம் செய்துள்ள தமிழ் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டதா?

அரசியல் தீர்விற்காக அனைத்தையும் ஒத்திவைத்திருப்பதாக திருவாளர் சம்பந்தன் தெரிவித்திருந்தார். அதற்காகவே முன்னர் மைத்திரி ரணில் அரசாங்கம் கொண்டுவந்த அனைத்து விடயங்களையும் கேட்டுகேள்வி இன்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறுவதற்கு உதவினார். இன்று வடக்கு-கிழக்கில் குவிந்துள்ள இராணுவத்தினரை வெளியேற்றக்கோரி நீலிக்கண்ணீர் வடிக்கும் கூட்டமைப்பின் எம்பிக்கள், கடந்த நான்கு வருடங்களாக பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட அதிகளவு நிதியை எதிர்த்து ஒரு வசனம் கூட பேசாமல் அல்லது நாடாளுமன்றத்தில் வாய்கிழிய கத்திவிட்டு பின்னர் அதற்கு ஆதரவாகத்தானே வாக்களித்துள்ளனர்.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ரணிலால் வெற்றிபெற முடியாது என்பதால்தானே பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் சனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைத்து அதனை பாராளுமன்றத்தினூடாக பிரதமருக்கு வழங்கும் 19ஆவது திருத்தத்தை ஐ.தே. கவுடன் இணைந்து சுமந்திரன் தயாரித்தார். அதற்கு தனது சகாக்கள் அனைவரையும் ஆதரவளிக்கச் செய்தார். நூறுநாள் வேலைத்திட்டத்தில் இதனை நிறைவேற்ற முடிந்த சம்பந்தர் கூட்டத்திற்கு நான்கு ஆண்டுகளில் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லையே.

ஒவ்வொருமுறை வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்கும் அரசாங்கத்தை நெருக்கடியிலிருந்து காப்பதற்கும் ஏதோவொரு வெகுமதியைக் கூட்டமைப்பினர் பெற்றுக்கொண்டுள்ளனர். முதலில் நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு புதிதாக வந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே தீர்வையற்ற வாகனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. பின்னர் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. இதுவும் கூட்டமைப்பினரை மையப்படுத்தியே வழங்கப்பட்டது.

அரசியல் நிர்ணய சபையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை ஆமோதித்ததற்காகவும் 2018ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்ததற்காகவும் அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்த சட்டத்திற்கு கண்மூடி ஆதரவு வழங்கியதற்காகவும் கூட்டமைப்பின் 15 பாராளுமன்ற உறுப்பினர்களும் அபிவிருத்தி நிதியாக தலா இரண்டரை கோடி ரூபாய் பெற்றுக்கொண்டனர்.

2018ஆம் ஆண்டில் எமது பிரச்சினைகளை திட்டமிட்டு திசை திருப்புவதற்காகவே மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு நாடகத்தில் வேண்டுமென்றே சனாதிபதிக்கு எதிரான நிலையெடுத்து, ரணிலைக் காப்பாற்றி தனியாக ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி ஆட்சி அமைக்க வழிசெய்தமைக்காக கூட்டமைப்பின் ஒவ்வொரு உறுப்பினரும் அபிவிருத்தி என்னும் போர்வையில் பெற்றுக்கொண்ட தொகை நாற்பது கோடி.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரம் உயர்த்தித் தருவதிலோ தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பதிலோ அக்கறையின்றி இருப்பதுடன் அவற்றிற்கு சாட்சிகளாக நின்று காணி உறுதி வழங்குவதும் எதனடிப்படையில்? தமிழ் மக்களின் வழிபாட்டிடங்களை வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தி அதில் பௌத்தவிகாரைகள் அமைப்பதை தடுக்க முடியாமலிருப்பதன் காரணம் என்ன? தலைவரின் சொந்தத் தொகுதியிலேயே வரலாற்றுச் சிறப்பு மிக்க வெந்நீரூற்றைக் காக்க முடியாமல் போனது ஏன்?

தமிழ் மக்களின் நலன்களை வென்றெடுத்து தருவோம் எங்களை நம்புங்கள் நான் இருக்கிறேன் என்று சொல்லி நம்பிக்கையூட்டி அவர்களை நடுத்தெருவில் விட்டதற்கான சன்மானங்களா அவை? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த செயலை எப்படி அழைப்பது?

ஆங்கிலத்தில் என்றால் நெகோசியேட்டர், பார்கைனர், பெசிலிடேட்டர், புரோக்கர், கமிசன் ஏஜென்ட் என்று சூழலுக்கேற்ப அவர்களை அழைப்பதற்குப் பலவகையான சொற்கள் உள்ளன. ஆனால் இவைகளுக்கு தமிழில் தரகர் என்ற சொல்லே பாவனையில் உள்ளது. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் மக்களின் மன ஓட்டத்தை தனக்குத் தெரிந்த சொல்லில் அதனைக் கூறியுள்ளார்.

# இனப்படுகொலைக்கு உள்ளான நாம் அதற்கு நீதி கோருவது, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்பதற்காக நாம் நீதியினை கோராமல் விட முடியுமா?

## யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றிய செயலாளர் பபிலராஜ் - நேர்காணல்



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அன்றாட செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன ?**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் நாடு முழுவதும் ஏற்பட்டிருந்த பதற்றமான சூழல் மெல்லத் தணிந்து விட்ட நிலையிலும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என மாணவர்கள் அதிகம் கூடும் இடங்களில் இன்றும் பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவத்தினரை நிறுத்தி வைத்திருப்பதானது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக சூழல் வழமைக்கு திரும்ப தடையாகவுள்ளது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அன்றாட செயற்பாடுகள் வழமை போன்று சுமூகமான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இருந்த போதிலும் இன்றும் பல்கலைக்கழகத்திற்குள் உட்பிரவேசிக்கும் அனைவரும் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திவிட்டுச் செல்லும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்கலைக்கழக அடையாள அட்டையினை நுழைவாயிலில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பரிசீலித்து உள்ளே அனுமதிப்பதுடன் புத்தகப்பைகளும் சோதனையிடப்படுகின்றன .

நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய அசாதாரண சூழ்நிலையில் பல்கலைக்கழத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அவசியம் ஆனாலும் பாடசாலை மாணவர்களின் அன்றாட சுமூகமான செயற்பாடுகளுக்கு இச் செயற்பாடானது இடையூறாக உள்ளது போன்றே எம்மால் உணர முடிகின்றது .

**யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் நீங்கள் உட்பட சிற்றுண்டிச்சாலை ஊழியரின் கைது விடுதலையின் தற்போதைய நிலைமைகள் என்ன ?**

நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய அசாதாரண சூழ்நிலையினை தமக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு நன்கு திட்டமிட்ட வகையில் மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளரினை கைது செய்யும் நோக்குடனே இராணுவம் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தது என்றே எம்மால் ஊகிக்க முடிகின்றது. ஏனெனில் பொது வெளியில் மாவீரர் நாள் அனுஷ்டிக்க அனுமதியளிக்கப்பட்ட நிலையிலும் இனப்படுகொலை நினைவு நாளினை நினைவு கூர அனுமதியளிக்கப்பட்ட நிலையிலும் எம்மை இனப்படுகொலைகள் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட 'பதாதைகள்' அரசுக்கு எதிரானவை என்று குற்றம் சாட்டப்பட்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படம் வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு அவை மாணவர் ஒன்றிய தலைவரின் அலுவலக அறையிலும் மற்றும் மாணவர் ஒன்றிய செயலாளரின் அலுவலக அறையிலும் இருந்மையினால் மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் நானும் கைது செய்யப்பட்டோம் .

மற்றும் மருத்துவ பீட சிற்றுண்டிச் சாலையில் தொங்கவிடப்பட்டிருந்த தியாகி திலீபனின் புகைப்படத்தினை காரணம் காட்டி சிற்றுண்டிச் சாலை நடத்துனரும் கைது செய்யப்பட்டார் .

மேலும் மாணவர் ஒன்றிய அலுவலகத்திலிருந்து எடுக்கப்பட்ட 'பதாதைகள்' இனப்படுகொலைக்கு நீதி கோருவதாக அமைவதனால் அவை அரசுக்கு எதிரானவை நாட்டில் இனங்களுக்கிடையிலான பிளவினை ஏற்படுத்தப் போகின்றோம் என்ற வகையில் குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்கள். இத்தனைக்கும் பொது வெளியில் பல்வேறு அமைப்புக்களும் இனப்படுகொலைக்கு நீதி கோரி போராட்டங்களை மேற்கொண்டுள்ளன .

இனப்படுகொலைக்கு உள்ளான நாம் அதற்கு நீதி கோருவது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்பதற்காக நாம் நீதியினை கோராமல் விட முடியுமா? அப்படியானால் காவியுடை தரித்த பிக்குகள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அட்டூழியங்கள் மட்டும் என்ன இன ஐக்கியத்தினை ஏற்படுத்துகின்றது .

எமது கைது நன்கு திட்டமிடப்பட்ட ஒன்றுதான் என்பதற்கான ஆதாரங்களையும் வெகு விரைவில் அம்பலப்படுத்துவோம் .

விடுதலையின் பின்னரான நிலை என்னும் போது இதனை நாம் முழுமையான விடுதலையாக கருதவில்லை. தற்சமயம் பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளோம். வழக்கிலிருந்து விடுபட்டு முழுமையான விடுதலையினைப் பெற்றுக் கொள்வதே எமது நோக்கம். அதற்கான முன்னகர்வுகளினை மேற்கொள்ள பல்கலைக்கழகம் எமக்கு என்றும் பக்கபலமாக இருக்கும் என்று நம்புகின்றோம் .

**அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் நடைமுறையில் இருக்கின்றமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை பதற்றத்திற்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாக உணர்கின்றீர்களா ?**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான சூழ்நிலையில் அக்குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தரப்புக்களினை கைது செய்ய வேண்டிய சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை அடக்கு முறைக்குள் வைத்திருக்க முனையும் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் விம்பமாக யாழ் பல்கலைக்கழகமோ அல்லது மாணவர் ஒன்றியமோ செயற்படுவதனை விரும்பவில்லை என்பதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்காலத்தில் தமிழின அடக்கு முறைகளுக்கு எதிராக நீதி கோரி குரல் எழுப்புவதினை தடுக்கும் வகையில் அல்லது இவ்வாறு குரல் எழுப்ப முடியாத சூழலிற்குள் பல்கலைக்கழக மாணவர்களினை கட்டுப்படுத்தி இன்றைய சூழ்நிலையினை சரியாக கையாள்கின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது .

பல்கலைக்கழக மாணவர் தலைவர்களினை கைது செய்வதன் மூலமாக ஒட்டுமொத்த மாணவ சமூகத்தினையும் அடக்க முடியும் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். மாணவர் சக்தியின் மகத்துவத்தினை அறியாது மாணவர்கள் மீது அடக்கு முறையினை ஏவ முற்படும் ஆட்சியாளர்கள் அதற்கான பிரதி பலன்களை நிச்சயமாக அனுபவிப்பார்கள் .

11 ஆம் பக்கம் பார்க்க

7 ஆம் பக்க தொடர்ச்சி →

## ஈழ அன்னையர்கள்தான்

மக்களும் சமூக வலைத்தளங்கள் எங்கும் விமர்சனங்களை முன் வைத்திருக்கிறார்கள். தொலைக்காட்சி ஊடகங்கள் மாய சன்னங்களை உடம்பில் ஏற்றுபவை, ஊசி மருந்து குருதியுடன் கலப்பதைப்போல ஆக்கிரமிப்பவை என தொடர்பியல் கோட்பாட்டாளர்கள் சொன்னது தமிழக ஊடகங்களுக்கு நன்றாகவே பொருந்திப் போகின்றன. இன்றைக்கு அங்கிருக்கும் பிரேக்கிங் நியூஸே தமிழக மக்களை நோயாளிகள் ஆக்கக்கூடியவை. இதுபோன்ற மெய்மை நிகழ்ச்சிகளே மக்களை தனிமைப்படுத்தி சமூகயமாக்கலையும் வாழ்வு மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் முடக்குபவை. ஊடகம் எதற்காக உருவாக்கப்பட்டதோ, அவைகளுக்கு எதிரானவையாக மாறிவிட்டன இந்த ஊடகச் சூழல். பிக்பாஸை பற்றிப் பேச வேண்டும் என்பதை ஒரு நிர்ப்பந்தமாக்குகிறது குறித்த நிகழ்ச்சியை நடத்தும் வணிகத் தொலைக்காட்சி. அது ஈழத்தின் கோடிவரை இன்று



வருகின்றது. தமிழீழ மக்கள் ஒன்றைத்தான் வேதனையுடன் சொல்ல விரும்புகின்றனர். கமராக்கள் சூழ்ந்த ஒரு வீட்டில், நூறு நாட்கள் நடக்கிற பிக்பாஸ் நிகழ்ச்சியை பார்ப்பதைவிட திரும்பி ஈழத்தைப் பாருங்கள். ஆயிரம் நாட்களாக வெயிலிலும், மழையிலும் பனியிலும் இருந்து போராடுகின்ற எங்கள் அன்னையர்கள்தான் இந்த உலகின் பிக்பாஸ்கள். சுற்றிச் சுற்றி சிங்கள இராணுவக் கமராக்களின் மத்தியில் வாழ்வை போராட்டமாக்கியவர்கள்.

## பலாலி விமான நிலைய அபிவிருத்தி பணிகள் யூலை 5இல் ஆரம்பம்

பலாலி விமான நிலையத்தை அனைத்துலக விமான நிலையமாக அபிவிருத்தி செய்யும் பணிகள், வரும் யூலை 5ஆம் நாள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, சிறீலங்காவின் போக்குவரத்து, சிவில் விமான போக்குவரத்து இராசாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார். நேற்று சிறீலங்கா நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், “பலாலி விமான நிலையத்தை அனைத்துலக விமான நிலையமாக தரமுயர்த்துவதற்கான பணிகள் யூலை 05ஆம் நாள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக, பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்படாது. பலாலி விமான நிலையம் மற்றும் விமானப்படைக்கு சொந்தமான காணிகளைக் கொண்டே, விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த விரிவாக்கப் பணிகளை இரண்டு, மூன்று மாதங்களுக்குள் முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

10 ஆம் பக்க தொடர்ச்சி →

## இனப்படுகொலைக்கு உள்ளான

### யாழ் பல்கலைக்கழகம் மீது கழுகுப் பார்வை தொடரும் அதே நேரம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் படை முகாம் காணப்படுவதாக கூறப்படுவது பற்றி உங்களது நிலைப்பாடு?

யாழ் பல்கலைக்கழகத்தின் மீதான கழுகுப் பார்வையானது இன்று நேற்றல்ல அது காலாகாலமாக இருந்து வருகின்ற ஒன்றாக உள்ள போதும் மீண்டும் தற்போது அத்தகைய கழுகுப் பார்வை உச்சம் பெற்றுள்ளது என்றே கூற முடியும். தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்திலும் சரி தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களிலும் சரி மாணவர் ஒன்றியம் கணிசமான பங்கினை வகித்து வருவதால் எம் மீது அரச புலனாய்வுத் துறையின் கழுகுப் பார்வை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

மாணவர் ஒன்றியத்திற்கு நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலமாக அடக்கு முறைகளுக்கு எதிரான மாணவர்களின் சனநாயகப் போராட்டங்களினை மழுங்கடித்துவிட முடியாது. எத்தகைய அடக்கு முறைகள் தொடர்ந்தாலும் மாணவர் சக்தி அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராட என்றுமே தயங்கப் போவதில்லை.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது தொடர்பாக அதன் உண்மைத் தன்மைகளினை அறியாமல் அது தொடர்பில் கருத்துக் கூற விரும்பவில்லை. இருந்தாலும் அவ்வாறு படை முகாம் அமைக்கப்பட்டிருந்தால் அது கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும் .

### யாழ் பல்கலைக்கழகம் உட்பட வட கிழக்கு தமிழர் தாயகத்தில் சுமூகமான நிலைமைகள் ஏற்படுவதற்கு மாணவர்களின் வகிபாகம் எவ்வாறாக உள்ளது ?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான பதற்றமான சூழ்நிலையில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களினை மீளத் தொடங்குவதற்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது பல்கலைக்கழக நிர்வாகம் இராணுவம் பல்கலைக்கழகத்தினை முழுமையாக சோதனையிட அனுமதியளித்தது. சுமூகமான முறையில் கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவும் மாணவர்கள் நம்பிக்கையுடன் மீண்டும் கல்வி கற்பதற்கான சூழல் உள்ளது என்பதனையும் உறுதிப்படுத்துவதில் மாணவர் ஒன்றியம் கரிசனை கொண்டிருந்தமையால் அத்தகைய சோதனை நடவடிக்கையினை மாணவர் ஒன்றியம் ஆட்சேபிக்கவில்லை.

பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மூவின மாணவர்களும் சுமூகமான கல்வி நடவடிக்கைகளினை தொடர்கின்றார்கள். எனவே மாணவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலினை இனவாத நோக்கில் பார்க்கவில்லை. இது நன்கு திட்டமிடப்பட்ட வகையில் ஒரு சில அடிப்படைவாதிகளின் நலன்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது என்பதால் மாணவர் சமூகத்தில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் சுமூகமான நிலையே காணப்படுவதால் அம் மாணவர்களினை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகம் இவர்களை முன்மாதிரியாகக் கொள்ளும் என நம்புகின்றோம்.

### மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் செயற்படுவது பற்றி எவ்விதம் பார்க்கின்றீர்கள் ?

மக்கள் பிரதிநிதிகள் கட்சி பேதங்களினை கடந்து எமது விடுதலைக்காக உழைத்தார்கள் என்பதால் அவர்களுக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். மக்கள் பிரதி நிதிகள் தாம் சார்ந்த ஒரு சமூகத்தின் ஓர் அங்கமான யாழ் பல்பலைக்கழக மாணவர்கள் கைதாகியதுமே அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஒற்றுமையாகச் செயற்படுவது போல் மக்கள் நலன் சார்ந்த விடயங்களிலும் இன விடுதலை சார்ந்தும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அவ் விடயத்தில் அரசியல்வாதிகளின் செயற்பாடு அல்லது தலையீடு இருக்கக்கூடாது என நாம் எதிர்பார்க்க முடியாது. இக் கைது விவகாரம் ஒரு அரசியல் சார்ந்த பிரச்சினையாக நோக்கப்பட்டதனால்தான் எம்மால் வெகு விரைவில் பிணையில் வெளிவர முடிந்தது. அரசியல் பிரச்சினையில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்பதோடு அதை நாம் தவிர்க்கவோ புறக்கணிக்கவோ முடியாது.

5 ஆம் பக்க தொடர்ச்சி →

## சிங்கள, பௌத்த

ஒடுக்குவதற்கே விளைகின்றார்கள். இந்த மாயைக்குள் நாம் அகப்பட்டு விடக்கூடாது.

மேலும், கல்முனை வடக்கு தமிழ் பிரிவு தரம் உயர்த்தப்படுவதற்கு தேரர்கள் உண்ணாவிரதம் இருந்து ஆதரவளித்துக்கொண்டிருக்கையில் மறுபக்கத்தில் திருகோணமலை கன்னியாவில் பிள்ளையார் கோவில் அகற்றப்பட்டு வரலாற்று நிலத்தினை கையகப்படுத்த தேரர்கள் முனைகின்றார்கள்.

முல்லைத்தீவில் நீராவி பிள்ளையார் கோவிலை அகற்றி பௌத்த விகாரையை உறுதியாக நிர்மாணிக்க விளைகின்றார்கள். இதனைவிடவும் வடக்கிலும் கிழக்கிலும் பௌத்த விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளை வேகமாக முன்னெடுத்து வருகின்றார்கள். சிங்கள மக்களை தமிழர் தாயகத்தில் குடியேற்றும் செயற்பாடுகளை கைவிடுவதாகவும் இல்லை.

இந்தநாட்டில் பாரம்பரிய இனமான தமிழினம் தனது அடையாளங்களுடன் சுதந்திரமாக சமத்தவமாக, வாழவேண்டும் என்ற நல்லிணக்க எண்ணம் பௌத்த தேரர்களிடத்திலோ அல்லது சிங்கள ஆட்சியாளர்களிடத்திலோ உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் ஏற்பட்டு இருந்திருந்திருந்தால் மேற்படி நடவடிக்கைகள் எல்லாம் உடன் நிறுத்தப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

பௌத்த தேரர்களாக இருக்கலாம், சிங்கள தலைவர்களாக இருக்கலாம் தற்போதைய சூழலில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக முன்னெடுக்கும், அல்லது குரல் எழுப்பும் செயற்பாடுகள் எல்லாம் தமிழனப் பற்றில் உள் மனதிலிருந்து ஊற்றெடுக்கும் நல்லெண்ண சமிக்ஞையே அல்ல. பிறிதொரு சிறுபான்மை சமூகத்தினை அடக்குவதற்கு தமிழினத்தினை பயன்படுத்துவதற்கான சூழ்ச்சியே ஆகும். இந்த மாய வலைக்குள் தமிழினம் சிக்குப்பட்டு விடக்கூடாது என்பது தான் தமிழ் தரப்பு புத்திஜீவிகளின் எண்ணமாக உள்ளது. இதேவேளை, தமிழர்களுடன் கசப்பான மனநிலையை கொண்டிருக்கும் முஸ்லிம்களும் இந்த விடயத்தினை புரிந்துகொள்ள வேண்டிய கால கட்டம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி அடுத்தவாரம்....

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## தமிழரசுக் கட்சி மாநாட்டுத் தீர்மானங்கள்

ஒருவரைத்தான் பொதுச் செயலாளராக அவர்கள் நியமித்துள்ளார்கள். உட்கட்சி சனநாயகம் காணாமல்போயுள்ளது.

மாதர் முன்னணி, இளைஞர் முன்னணி என்பன தனித்தனியாகக் கூட்டங்களை நடத்தி தீர்மானங்களை வெளியிட்டுள்ளன. மாதர் முன்னணியின் தீர்மானங்களில் பிரதானமாக, பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல், கட்சிக் கட்டமைப்புக்குள் பெண்களை சமத்துவ அடிப்படையில் உள்வாங்குதல் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது. பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும், சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பது அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைதான். ஆனால், வரப்போகும் தேர்தல்களை மட்டும் இலக்காகக்கொண்டு இந்தத் தீர்மானங்களை இவர்கள் வெளியிட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள், பத்துவருடகாலமாக வீதிகளில் நின்று போராடும் பெண்களைப் பற்றி இவர்கள் அக்கறைகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறான போராட்டங்கள் எதிலும் பங்குகொண்ட பெண்களாகவும் இவர்கள் இல்லை. வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றி, உள்ளூராட்சி மன்றம் உட்பட எதிலாவது பதவிகளைப் பெற்றுக்கொண்டால் போதும் என்ற மனநிலையில் மாநாட்டுக்கு வந்தவர்களாகவே இவர்கள் உள்ளார்கள். போரால் உறவுகளை இழந்து வீதிகளில் நின்று போராடும் தாய்மார்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவர்களாக இவர்கள் இல்லை.

வாலிபர் முன்னணியின் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையாக உள்ளன. தமிழ் அரசுக் கட்சி ஆரம்பித்த 1949ம் ஆண்டில் தீர்மானித்த தமிழீழ தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னனெடுப்பது என்பது அவர்களுடைய முதலாவது தீர்மானம். இரண்டாவது தீர்மானம் இவ்வாறு வருகிறது. "தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யும் வகையில் 2002ம் ஆண்டில் எய்தப்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் கூறப்பட்டபடி..." அதாவது, "அபிலாசைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யும்" வகையில் அது போகிறது.

ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல், இனஅழிப்பு என்பதைப் பதிவு செய்தல், பொருளதார அபிவிருத்தி என தேர்தல் வாக்குறுதிபோல பல தீர்மானங்கள் வாலிப முன்னணியால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களிலும் வாலிப முன்னணி செயற்பட்டது. இந்தத் தீர்மானங்கள் அனைத்துக்கும் முரணாக தமிழரசுக் கட்சித் தலைமை செயற்பட்டபோது இந்த வாலிப முன்னணி என்ன செய்தது? இவற்றுக்கான போராட்டங்கள் எதனையாவது அவர்கள் முன்னின்று நடத்தினார்களா?

இப்போது தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில் தலைமைக்கு அழுத்தம் கொடுத்து 'சீற்' பெற்றுக்கொள்வதும், மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதும்தான் அவர்களுடைய நோக்கமாகவே தெரிகின்றது. அதனால்தான் ஐந்து வருடங்களாக மாநாட்டை நடத்த வேண்டும் என்ற அழுத்தத்தைக் கூட தலைமைக்குக் கொடுக்காத வாலிபர் முன்னணி புதிய கோசங்களுடன் புதிய முகத்துடன் மக்கள் மத்தியில் வர முற்படுகின்றது. மக்கள் இப்போது அரசியல்மயப்பட்டுவிட்டார்கள். தேர்தலுக்காக முன்வைக்கப்படும் வெற்றுக்கோசங்களுக்கு அவர்கள் மயங்கிவிடமாட்டார்கள் என்பதை தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றது.

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மீதான சிங்களத்தின் அச்சம் ஏன்

### பேராசிரியர் றோகன் குணரட்ண

2009இல் ஆயுத மோதல்களின் முடிவுக்கு பின்னராக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமராக இருக்கின்ற வி.உருத்திரகுமாரன் அவர்களே, எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களின் ஒருவரென சிங்கள அரச கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரான பேராசிரியர் றோகன் குணரட்ண தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இருந்து வெளிவருகின்ற ஆங்கில ஊடமொன்று பதில் அளித்துள்ள அவர், வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து மீட்கப்பட்ட விடுதலைப்புலிகளின் ஆவணங்களின் அடிப்படையில் பல அமைப்புக்களும், பலரும் தடைசெய்யப்பட்டனர்.

அதில் குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய பணியாற்றிய வி.உருத்திரகுமாரன் அவர்களே, தற்பபோது எஞ்சியுள்ள முக்கிய விடுதலைப்புலிகளின் ஒருவராக அமெரிக்காவில் காணப்படுகின்றார் என்றும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எனும் முன்னணி அமைப்பை அவர், அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் முன்னெடுத்து வருகின்றார் என்றும் எச்சரித்துள்ளார்.

இதேவேளை புலம்பெயர் தமிழர்களின் அரசாங்கமாக இயங்குகின்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது, இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழீழத்தை உருவாக்குவதனை இலக்காக கொண்டு செயற்படுகின்றது என்றும், இதனை சர்வதேச நாடுகள் தடை செய்ய வேண்டும் என்று ஜெனீவா ஐ.நா மனித உரிமைச்சபைக்கு வந்துள்ள முன்னாள் இராணுவ அதிகாரிகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மீதும், அதன் பிரதமர் மீதும் தமது அச்சத்தையும், எதிர்ப்பையும் சிங்கள தலைவர்கள் பலரும் தொடர்சியாக வெளியிட்டு வருகின்ற நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியற்துறை, '2009 மே மாதத்தில் பெரும் இனஅழிப்பொன்றின் ஊடாக தமிழர் தேசத்தை ஆக்கிரமிப்புச் செய்த சிங்கள அரசு, தமிழர்களின் சுதந்திர வேட்கையினை இல்லாது செய்து விடலாம் என நினைத்திருந்தது.

ஆனால் அந்த சுதந்திர வேட்கையினையும் தாகத்தினையும் உயிர்ப்போடு வைத்திருக்கும் வகையில், சரியாக ஒரு மாத காலத்தில் (யூன் 2009) அறிவிக்கப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது, இன்று பத்து ஆண்டுகளாக வலிமையான ஒரு தேசிய அரசியல் இயக்கமாக வளர்ந்துள்ளது. இந்த வலிமையினை உணர்ந்தபடியால்தான் சிங்கள கொள்கை வகுப்பாளர்களும் , தலைவர்களும் அச்சப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

# கண்டியில் தொழிற்சாலையில் தீ விபத்து



கண்டியில் இன்று பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

கண்டி மாநகரின் புறநகரான கடுகஸ்தோட்டையிலேயே இந்த பாரிய தீ விபத்து நிகழ்ந்துள்ளதாக காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

கட்டுகஸ்தோட்டை அலதெனியாவில் அமைந்துள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் இந்த தீ விபத்தி நிகழ்ந்துள்ளது.

தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் கண்டி தீயணைப்புப் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## தமிழரசுக் கட்சியின்

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனையை நீர்த்துபோகச் செய்யும் நோக்கோடு இலங்கை அரசு எடுக்கும் நீதிக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு தமிழரசுக்கட்சி துணைபோகாதே! ஐ.நா மன்றத்தில் கால அவகாசம் வழங்கி இலங்கையை கூட்டமைப்பு பாதுகாப்பதற்கா தமிழ் மக்கள் வாக்களித்தோம்! உரிமைகளை மறந்து அரசின் சலுகைகளுக்குள் கூட்டமைப்பு மூழ்கிவிட்டது! தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணி மகளிர் அணி இதுவரை தமிழ் மக்களின் உரிமைக்காக சனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுத்தீர்களா?

போன்ற கோசங்களை தமிழரசு கட்சிக்கு எதிராக அவர்கள் கண்ணீர் மல்க எழுப்பினார்கள். இதன்போது தமிழரசுக்கட்சியைச்சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழையாத வண்ணம் நுழைவாயில்களில் காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் விசேட அதிரடிப்படையினரும் அங்கு காணப்பட்டனர்.

# ஐ. நா மனித உரிமைகள் சபையின் 41வது கூட்டத்தொடரில் தமிழின அழிப்பு நாள் நினைவுகூறல்






ஐ. நா மனித உரிமைகள் சபையின் 41வது கூட்டத்தொடர் 25-06-2019 அன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 12-07-2019 வரை நடைபெற உள்ளது. கூட்டத்தொடரில் தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பின் ஏற்பாட்டில் தமிழர் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஈழத் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கெதிராகக் குரல்கொடுத்து வருகின்றனர்.

தமிழர் இயக்கம் பல அமைப்புக்களுடன் இணைந்து பல பக்கவறை நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளன. அதன் ஒரு கட்டமாக முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் பத்தாவது ஆண்டு நினைவுதினம் கடந்த 25-06-2019 அன்று புதன்கிழமை நினைவுகூரப்பட்டது. இறுதி யுத்தத்தில் அரங்கேற்றப்பட்ட இனவழிப்பு இடம்பெற்று பத்தாண்டுகளில் தமிழர்களின் தற்போதைய நிலை தொடர்பாகவும் வடமாகாண சபையின் தீர்மானத்தின் சுருக்கம் மற்றும் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மே 18 தமிழின அழிப்பு நினைவு நாளில் வாசிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வாசிக்கப்பட்டது.












# பப்புவா நியூ கினியின் மத்திய அமைச்சரான தமிழர் சசீந்திரன் முத்துவேல்

பப்புவா நியூ கினியின் மத்திய அரசுத்துறை நிறுவனங்களின் அமைச்சராக தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட சசீந்திரன் முத்துவேல் பதவியேற்றுள்ளார்.

பசிபிக் பெருங்கடலில் அவுஸ்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் இடைப்பட்ட நீர்ப்பரப்பில் அமைந்துள்ள 16 தீவு நாடுகளில் மிகப் பெரிய நாடாக விளங்கும் பப்புவா நியூ கினியின் மத்திய அமைச்சராக பதவியேற்கும் முதல் தமிழர் மட்டுமல்ல முதல் இந்தியரும் சசீந்திரன் முத்துவேல்தான்.

மத்திய அமைச்சராக யூன் 7ஆம் திகதி பதவியேற்பதற்கு முன்புவரை, இவர் அந்நாட்டிலுள்ள நியூ வெஸ்ட் பிரிட்டன் மாகாணத்தின் ஆளுநராக ஆறாண்டுகளாக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டாசுக்கு பெயர்போன சிவகாசியில் பிறந்து, தமிழ் வழியில் பள்ளிக் கல்வி முடித்து,



கல்லூரியில் விவசாயம் படித்த சசீந்திரன், எப்படி பப்புவா நியூ கினி எனும் தமிழர்களுக்கு பரீட்சயமற்ற நாட்டின் மத்திய அமைச்சராக உயர்ந்தார் என்பதை அவரிடமே கேட்டோம்.

சிவகாசியில் அச்சு தொழிலை செய்து வந்த குடும்பத்தில் பிறந்த சசீந்திரன், 10ஆம் வகுப்புவரை தமிழ்வழிக் கல்வியில் பயின்றார். பிறகு, தனக்கு கிடைத்த உதவித் தொகையை பயன்படுத்தி ஆங்கில வழியில் மேல்நிலை கல்வியை முடித்தார்.

"நான் தமிழ்வழிக் கல்வியில் காட்டிய திறனை ஆங்கிலத்தில் வெளிப்படுத்த முடியாததால், மேல்நிலைக் கல்வியில் சிறந்த மதிப்பெண்ணை பெற முடியவில்லை. சிவகாசிக்கும் எங்களது குடும்பத்துக்கும் சம்பந்தமில்லாத விவசாயத்தில், பெரியகுளத்திலுள்ள கோவை வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் இளங்கலை பட்டப்படிப்பு பயின்றேன்.

விவசாயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்காததால் மலேசியாவுக்கு சென்று இரண்டாண்டுகள் பல்பொருள் அங்காடி ஒன்றில் மேலாளராக பணியாற்றினேன்.

அப்போது, பப்புவா நியூ கினி நாட்டில் வேலைவாய்ப்பு இருப்பதாக நண்பர்கள் தெரிவித்ததையடுத்து, 1999இல் அந்நாட்டிலுள்ள நியூ வெஸ்ட் பிரிட்டன் எனும் மாகாணத்திற்கு சென்றேன்," என்று கூறுகிறார்.




உலகங்களை எல்லாம் விழுங்கி ஏப்பம் விடும் மிக ஆபத்தான ஒரு அமைப்பு விண்வெளியில், பிரபஞ்சத்தில் இருக்கிறது என்பதும், அதன் பெயர் கருந்துளை (ப்ளாக்ஹோல்) என்பதும் அனைவரும் அறிந்ததே.

கருந்துளையானது, ஒரு கட்டத்தில் காற்றோடு காற்றாய் கரைந்து மறைந்து போய்விடும் என்று கடந்த 1974-ம் ஆண்டு, மறைந்த பிரபல இயற்பியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் கணித்துச் சொல்லியிருக்கிறார்.

சொன்னது உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஹாக்கிங்காகவே இருந்தாலும் கூட, பூமி, சூரியன் போன்ற கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களை விட ஆயிரம் பல்லாயிரம் மடங்குகள் பெரிய பிரபஞ்ச அமைப்புகளையும் துச்சமென எண்ணி விழுங்கிவிடக் கூடிய கருந்துளை எப்படி கரைந்து மறைந்து போகும் என்று சந்தேகமும், குழப்பமும் ஏற்படுவதும் இந்த கருத்தை ஏற்றுக்கொள்வது கடினம் என்பதும் இயல்புதான்.

இப்போது, கருந்துளை குறித்த ஹாக்கிங் கணிப்பு உண்மை என்று இஸ்ரேல் நாட்டில் உள்ள டெக்னியான் இஸ்ரேல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியைச் சேர்ந்த இயற்பியலாளர் மற்றும் கருந்துளை ஆய்வாளர் ஜெப் ஸ்டைன்ஹவ்வார் (Jeff Steinhauer) தலைமையிலான ஆய்வுக்குழுவினர் சமீபத்தில் நிரூபித்துள்ளனர்.

தொடர்ச்சியாக 'எதிர்மறை சக்தி' கொண்ட பல்வேறு வகையான துகள்களை விழுங்கிக்கொண்டே இருப்பதால், ஒரு கட்டத்தில் கருந்துளைகளின் நிறையானது எதிர்மறை சக்தி கொண்ட துகள்களால் உறிஞ்சப்பட்டு இல்லாமல் போய்விடும் என்றும், அதனாலேயே கருந்துளை இறந்து போய்விடும் என்றும் கூறப்படுகிறது.

முக்கியமாக, விண்வெளியில் உள்ள வெற்றிடம் பொதுவாக ஒன்றும் இல்லாத வெற்றிடமாகவே கருதப்பட்டாலும், குவாண்டம் மெக்கானிக்ஸ் விதிகளின்படி, விண்வெளியின் வெற்றிடத்தில் பருப்பொருள் மற்றும் எதிர்பருப்பொருள் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு வினையானது தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டே இருக்கிறது என்பதே உண்மை என்று கூறப்படுகிறது.

பருப்பொருளுக்கு எதிரான மின்னூட்டம் (electric charge) கொண்ட துகள்கள் எதிர்பருப்பொருள் என்று அழைக்கப்படுகின்றன. பருப்பொருள் மற்றும் எதிர்பருப்பொருள் (matter-antimatter) ஆகியவை இணையாக இருந்தாலும், ஒன்றை ஒன்று அழித்துக்கொள்ளும் தன்மை கொண்டவை. ஆனால், இவை இரண்டும் ஒரு கருந்துளைக்கு அருகில் வரும்போது, கருந்துளையின் ஈர்ப்பு சக்தியானது அவற்றை வெவ்வேறு திசைகளில் பற்றி இழுத்து ஒன்றை ஒன்று அழிக்காமல் தடுத்துவிடும் என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு கருந் துளையில் இருந்து ஒரு வகை கதிர்வீச்சு வெளியாகும் என்று ஸ்டீபன் ஹாக்கிங் கண்டுபிடித்துக் கூறியதால் அந்த கதிர்வீச்சு 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று அழைக்கப்படுகிறது. மிகவும் முக்கியமாக, கருந்துளையின் ஈர்ப்பு சக்தியால் எதிர்பருப்பொருளில் இருந்து பிரிக்கப்படும் பருப்பொருள்தான் ஹாக்கிங் கதிர்வீச்சாக கருந் துளையில் இருந்து வெளியேறுகிறது என்பதும், ஆனால் அதேசமயம், எதிர் பருப்பொருளானது கருந்துளைக்குள் உறிஞ்சப்பட்டுவிடுகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அப்படி தொடர்ந்து கருந்துளைக்கு உள்ளே உறிஞ்சப்படும் எதிர்மறை சக்தி கொண்ட எதிர்பருப்பொருள் காலப்போக்கில் மிகவும் அதிகமாகி கருந்துளையையே அழித்துவிடும் என்பதே இந்த ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ள ஹாக்கிங் கணிப்பாகும். துரதிர்ஷ்டவசமாக, உண்மையான கருந்துளையைக் கொண்டு இந்த ஆய்வை மேற்கொள்வது சாத்தியமில்லாத ஒன்று என்பதால், பருப்பொருள் - எதிர்பருப்பொருள் ஆகியவற்றுக்கு பதிலாக குவாண்டம் ஒலி அலைகளால் ஆன 'போனான் (phonon) துகள்' இணைகளை பயன்படுத்தினார் ஆய்வாளர் ஸ்டைன் ஹவ்வார்.

(Bose-Einstein condensate) எனப்படும் மிக மிக குளிர்ந்த ஒரு வாயு பயன்படுத்தப்பட்டது . கருந்துளையின் ஈர்ப்பு சக்தியை உற்பத்தி செய்ய போஸ் ஐன்ஸ்டீன் கண்டென்சேட்

இந்த ஆய்வில், எதிரெதிர் திசையில் பயணிக்கும் போனான்களில், வேகமாக பயணிக்கும் போனான் கருந் துளைக்கு உள்ளே உறிஞ்சப்படும் துகள் போலவும், மெதுவாக பயணிக்கும் போனான் கருந்துளைக்கு வெளியே செல்லும் ஹாக்கிங் கதிர்வீச்சு போலவும் செயல்பட்டன என்பது இங்கு கவனிக்கத்தக்கது. முக்கியமாக, கருந்துளையாய் செயல்படும் போஸ் ஐன்ஸ்டீன் கண்டென்சேட் வாயுவை நோக்கி வேகமாக செல்லும் போனான், வேகமாக வரும் அலையை நோக்கி ஒருவர் வேகமாக நீச்சல் அடிப்பது போன்றது. நீச்சல் அடிப்பவரின் வேகத்தைவிட அலையின் வேகமானது அதிகமாக இருந்தால், அந்த அலையானது நீச்சல் அடிப்பவரை இழுத்துக்கொண்டு கடலுக்குள் சென்றுவிடும்.

அதைபோலவே, வாயுவை நோக்கி வேகமாக செல்லும் போனான்கள் அந்த வாயுவுக்குள் உறிஞ்சப்பட்டு காணாமல் போகும் என்று விளக்குகிறார் விஞ்ஞானி ஸ்டைன்ஹவ்வார். ஆக மொத்தத்தில், 'வல்லவனுக்கு வல்லவன் இவ்வையகத்தில் உண்டு' என்பதைப் போல, உலகங்களை விழுங்கி ஏப்பம் விடும் கருந்துளைகளும் இறுதியில் அழிந்துவிடும் என்று உலகில் முதல் முறையாக நிரூபித்துள்ளது இந்த புதிய ஆய்வு.

# கடல் சூடானால், எந்த மீன் தாங்கும்?




பருவநிலை மாற்றம் நிலத்தையும் வானத்தையும் போல கடலையும் வெகுவாக பாதிக்கும். அப்படி பாதிக்கையில், கடல்வாழ் உயிரினங்கள், அதை எவ்வாறு தாக்குப்பிடிக்கும் என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். கடல் நீரின் வெப்பம் கூடும்போது, அதில் கரியமிலத் தன்மையும் அதிகரிக்கும். இது, மீன்களின் ஒட்சிசன் ஈர்க்கும் திறனை வெகுவாக பாதிக்கும்.

ஆனால், ஸ்க்விட் எனப்படும் கணவாய் மீன்கள் இந்த மாற்றத்தை சமாளித்து வாழும் திறனைப் பெற்றுள்ளதாக, 'கன்சர்வேசன் பிசியாலஜி' ஆய்விதழில் வெளியான ஆய்வு தெரிவித்துள்ளது.

கணவாய் மீன்களின் ஆயுள் குறைவுதான். என்றாலும் அவை வேகமாக வளரக்கூடியவை. ஆய்வகத்தில் கரியமிலத் தன்மையுள்ள நீரில் கணவாய் மீன்களை வளர்த்தபோது, நீரின் நச்சுத் தன்மையையும் மீறி அவை நன்கு வளர்ந்தன.

எனவே, புவி வெப்ப மாதலின் தாக்கம் கடலில் அதிகரித்தால், அற்கு ஏற்ப தகவமைத்துக்கொள்ளும் தன்மை இல்லாத உயிரினங்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பிக்கும். அதே நேரம் கணவாய் போன்ற தாங்கு திறன் கொண்ட மீன்களின் எண்ணிக்கை மிதமிஞ்சி அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# காற்றில்லாத சக்கரம் தயாராகிறது!



பிரபல டயர் நிறுவனமான மிச்செலின், ஜெனரல் மோட்டார்சின் உடைய 'செவர்லே போல்ட்' என்ற மின்சார காருக்கு, புதிய வகை சக்கரங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த சக்கரத்திற்குள், ரியூப் கிடையாது. எனவே, அதில் காற்றை அடைக்கும் தேவையும் இல்லை. பிறகு?

வழக்கமான சக்கரத்திற்கு பயன்படும் இறப்பரில் தயாராகும் இந்த டயருக்கு, 'அப்டிஸ்' என்று மிச்செலின் பெயரிட்டுள்ளது. 'யுனீக் பங்க்சர்லெஸ் டயர் சிஸ்டம்' என்ற ஆங்கில வாக்கியத்தின் சுருக்கம்தான் 'அப்டிஸ்'.

ஆனால், இறப்பரின் பயன்பாடு இதில் குறைவு. தவிர, வண்டி ஓடும்போதே டயர் வெடிக்கும் ஆபத்து இருக்காது. வண்டிகளில் ஸ்டெப்னி மாட்டத் தேவையில்லை என்பதால், வாகனத்தின் எடையும் சில கிலோக்கள் குறையும்.

ஜெனரல் மோட்டார்சே இதை வண்டிகளில், பொருத்த விருப்பதால், நிச்சயம், அப்டிஸ் டயர்களுக்கு வரவேற்பு பெருகும் என, எதிர்பார்க்கலாம்.